

1. மூன்று அம்சங்கள்

இந்த 'தீர்வுகள்' பகுதியிலே இன்றைக்கு ஒரு முக்கியமான விஷயத்தை நாம் பகிர்ந்துகொள்ள இருக்கிறோம். இந்த விஷயத்திலே நாம் மிகுந்த கவனமாக இருந்தால் வாழ்க்கையிலே வெற்றிபெறலாம். இல்லாவிட்டால் நாம் ஒருவேளை நான் சொல்லவிருக்கிற மூன்று அம்சங்களுக்கு நாம் இரையாகிவிடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

அந்த மூன்றை சொல்வதற்குமுன்பாக உங்கள் மத்தியிலே ஒரு மனக்கேள்வியை வைக்க விரும்புகின்றேன். உங்களிடமிருந்து விடை தெரிந்துகொள்ள எனக்கு வாய்ப்பில்லை. இருந்தாலும், ஒரு தரப்பாக நான் கேட்கிறேன். நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டால்தான் புரியும். இல்லையென்றால், நானே உங்களைக் குழப்புவதைப் போல ஒரு அபிப்ராயம் உங்களுக்கு ஏற்படும்

ஒரு உயிரினம், மனிதன் இருவரும் போரிடுகிறார்கள். அப்படிப் போரிடுகிறபொழுது, மனிதன் வென்றான் என்று சொன்னால் இந்த உயிரினம் மனிதனுக்கு இரையாக, உணவாக ஆகிவிடும். ஒருவேளை, இந்த உயிரினம் அந்தப் போராட்டத்திலே வெற்றிபெறுமேயானால் மனிதனே அதற்கு இரையாகிவிடுவான். ஒன்றுக்கொன்று உணவாகும் நிலைமை.

வினை என்கிறபோது, காலம்தான் வினை என்று சொன்னால் செயல்பாடு அதனுடைய ஆக்கம்.

எனவே, அது நம்மை ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துவிடும் என்பதை நம் முன்னோர்கள் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். சரியான நேரத்தைக் கடைப்பிடிப்பது, ஒரே நேரத்திலே பலவேலைகளை செய்யக் கற்றுக்கொள்வது, தூக்க நேரத்தைக் குறைப்பது, காத்திருக்கும் நேரத்தைப் பயன்படுத்துவது என்று பலவழிகளிலே நாம் நேரத்தைக் கைக்குள்ளே அடக்கிக் கொண்டு வரவேண்டும். அதனுடைய போக்கிலே அதை விட்டுவிட்டால், அது அரக்கனாக மாறி நம்மை ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிடும்.

இரண்டாவது அம்சம், பணம் என்று சொல்கிறார்கள். பணத்தை நாம் சரிவர நிர்வகிக்காவிட்டால், அது நம்மை பதம் பார்க்கிற ஒரு பெரிய ஆக்க சக்தியாக உருவாகி விடும். என்னுடைய தந்தை திரு. தமிழ்வாணன் அவர்கள், ''பணம் நிறைய இருந்தால், உன்னை உனக்குத் தெரியாது. பணம் உன்னிடத்திலே இல்லாவிட்டால், உன்னை எவருக்குமே தெரியாமல் போய்விடும்'' என்று சொல்வார்.

இந்த சமுதாயம் நம்மையும், நம்முடைய வெற்றிகளையும் எப்படி அளக்கிறது தெரியுமா? ஒருவன் வெற்றிகரமான மனிதன் என்பதைப்பற்றி அளவுகோலாக சொல்லுகிறபொழுது, பொருளாதாரம் என்கிற அளவுகோலால் தான் நம்மை அளக்கிறது. உதாரணமாக, 'லேனா இவ்வளவு பேசுகிறார். இவர் என்ன சாதித்துக் கிழித்தார்?' என்று ஒரு கேள்வி வந்தது என்றால், 'அந்த கிழித்த பொருள் என்ன என்று தெரியுமா? இவர் என்ன சம்பாதித்து வைத்திருக்கிறார்' என்பதுதான்.

இந்த சமுதாயம் நம்மை பொருளாதார அளவுகோலால்தான் பார்க்கத் துவங்குகிறது. இரண்டுபேர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மூன்றாம் நபர் வருகிறார். பேசிவிட்டுப் போகிறார். அவர் போன பிறகு இவரைப்பற்றி முதலில் உள்ள ஒருவர் சொல்லுவது, ''பெரும் பணக்காரன், எக்கச்சக்கமா பணம் வெச்சு இருக்கிறான்'' என்பார். மற்றதெல்லாம் அப்புறம்தான் பேசுவார்கள்.

இதை நான் என்னுடைய பயிற்சி வகுப்பிலே கேட்பேன். அது மனிதன் என்று தெரிந்துவிட்டது. இந்த உயிரினம் என்ன என்று கேட்பேன். சிலபேர் அவசரப்பட்டு சிங்கம் புலி, கரடி என்பார்கள். நான் சிங்கம், புலி, கரடியை மனிதன் தின்பதில்லை. எனவே, உயிரினம் என்ன என்பதைக் கவனித்து, யோசித்து சொல்லுங்கள் என்பேன்.

சிலநேரங்களிலே அவர்கள் சொல்லிவிடுவார்கள். சிலநேரங்களிலே, நான் சொல்லும்படி ஆகிவிடும். இப்படி நடக்கிற இந்த போராட்டத்திலே, யார் யாருக்கு இரையாவது என்கிற உறுதியான விஷயம் எப்படி நிகழ்ந்துவிடுமோ அதேபோல. நான் சொல்லக்கூடிய மூன்று விஷயங்களிலும் ஒரு மனிதன் அதை சரிவர நிர்வகிக்காவிட்டால் இவன் நிர்வகிக்கப்படுவான் அல்லது ஆதிக்கம் செலுத்தப்படுவான்.

அதாவது, எதிர்விளைவுகளை ஏற்படுத்தவல்ல மகத்தான சக்திகள் இவை என்று அந்த மூன்றையும் வர்ணிக்கிறார்கள். இதற்குமேலும் சஸ்பென்ஸை வளர்க்காமல் நான் அந்த மூன்றையும் சொல்லிவிடுகிறேன்.

முதலாவது, நான் எப்பொழுதுமே வலியுறுத்தக்கூடிய நேரம். நேரத்தை நாம் சரிவர நிர்வகிக்காவிட்டால் அது நம்மை நிர்வகிக்க ஆரம்பித்துவிடும் காலம் நமக்கு காலனாக (எமனாக) ஆகிவிடுவான். பலநேரங்களிலே நேரத்தினுடைய இழுத்த இழுவைக்கெல்லாம் நாம் ஓடவேண்டிய அவசியமும் சந்தர்ப்பமும் ஏற்பட்டுவிடும்.

ஓரளவு கெட்டிக்காரத்தனமாக அந்த நேரத்தை அணுகினால் அந்த நேரம் நமக்குத் தோழனாக மாறும் அல்லது அதை சரிவர நிர்வகிக்காவிட்டால் அதுவே நமக்கு எமனாக மாறிவிடும். ஆனால், மிகச்சிறந்த முறையிலே அதை நிர்வகித்தால். அது நமக்கு கையைக் கட்டி அடிமையைப் போல வேலை செய்யும். எனவே, நேரத்தை நாம் சரிவர நிர்வகிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதைப்பற்றித்தான் இவ்வளவு காலம் நாம் பார்த்தோம். இந்த சந்தர்ப்பத்திலே சிலபேர் சொல்வதை நாம் கேள்விப்படுகிறோம். எல்லாம் கால வினை என்று எங்கள் இராமநாதபுரம் பகுதியிலே சொல்வார்கள். எல்லாம் கால

நம்மைக் கொண்டுபோய், காவல்நிலையம், நீதிமன்றம்னு நிறுத்தி விடுவாங்க. அது எதிர்பாராமல் நடக்கிறது. அதை நாம் எதிர்பார்த்திருக்க மாட்டோம். இப்படி நாம் செய்யாத தவறுக்கும் சிலநேரங்களில் விலை கொடுக்க வேண்டி வரும். 'மீதம் இருக்கிற 5 சதவீத பிரச்சனைகள் நம் நாவால் வருவது' என்று என் தந்தை சொல்வார்கள். இங்கே இருக்கிறதை அங்கே சொல்லி, அங்கே இருப்பதை இங்கே சொல்லி, முகத்துக்கு முன்னாடி ஒன்று பேசி. முதுகுக்குப் பின்னாடி ஒன்றைப் பேசி, நாமாக இழுத்துக்கொள்கிற, தேவையில்லாத கொழுப்பு வார்த்தைகளால் வரக்கூடிய பிரச்சனைகள், மீதமிருக்கிறவை'' என்று என் தந்தை சொல்வார்கள்.

நல்ல சம்பாத்தியம் நிறைவான விஷயம்தான். ஆனால். ஒன்றிற்கு மேற்பட்ட சம்பாத்தியங்களை நாம் ஏற்பாடு செய்யவேண்டும். நான் சொல்வது தவறான பொருளிலே அல்ல. சரியான ஒரு அர்த்தத்திலேதான். இன்று நாம் சந்திக்கிற தேவைகளைப் பார்க்கிறபொழுது, ஒரே ஒரு வருமானம் என்பது போதுமானதாக இல்லை.

அவரவர்களுக்கு விரலுக்கேற்ற வீக்கம் போல, தேவைகள் அதிகமாகிக் கொண்டே போகின்றன. ஒன்றிற்கு மேற்பட்ட சம்பாத்தியங்களை நாம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே. கைநிறைய சம்பளம் என்று நிறைவடைய முடியவில்லை. அதற்கும் மேலாக வாழ்க்கையில் சில தேவைகள் வந்துவிடுகின்றன. எனவே, 'செய்க பொருளை' என்று சொன்னான் வள்ளுவன்.

வள்ளுவன்கூட சொல்லிவிட்டான், பணம் பண்ணு என்று. அவனே கூட எந்தக் காலத்திற்கும் பொருந்தும்படியாக அழுத்திச் சொல்லிவிட்டான். அதேபோல, ''இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்'' என்று சொல்வார்கள்.

இல்லான் என்றால் கணவன். இல்லாள் என்றால் இல்லத்தரசி. இல்லானை இல்லாலும் வேண்டாள். அதாவது பணமில்லாத கணவனை மனைவிகூட நேசிக்கமாட்டாள் என்று நம்முடைய மூதுரை சொல்லுகிறது. அதுபோல. ஈன்றெடுத்த தாயும் வேண்டாள் என்பதுதான் அதிலே கவனிக்கத்தக்கது.

ஒருவேளை அவர் சொல்லவில்லையென்றால், "பார்க்க ரொம்ப பெரிய மனுசனா தெரியுறாரு. ரொம்ப வசதி படைச்சவரோ,'' என்று இவருமே கேட்பார்... பொருளாதாரத்தைப் பற்றித்தான் மக்கள் அதிகமாக வினவுகிறார்கள். அதைப்பற்றிதான் அதிகமாக அக்கறைப்படுகிறார்கள். நிறைய பணம் கண்களை மறைத்துவிடுகிறது.

எங்கள் பக்கத்திலயெல்லாம் எவனாவது ரொம்ப ஆட்டம் போட்டான் என்றால், உடனே சொல்வார்கள், "புதுப்பணக்காரன் அப்படிதான் பண்ணுவான்; தலைமுறை தலைமுறையா நிறைய பணம் வைத்திருப்பவங்க ஒழுங்கா நடந்துக்குவாங்க. இந்தத் தலைமுறையில் சம்பாதிச்சவன் ஆட்டம் போடுறான்'' என்று அவர்கள் சொல்வார்கள்.

'ஆகவே, நிறைகுடம் தளும்பாது குறைகுடம் தளும்பும்' என்று சொல்லுகிறார்களே; அதன் அடிப்படையில் இதை நாம் அடக்கிவிடலாம். இந்த வாழ்க்கையிலே நாம் சந்திக்கிற பிரச்சனைகள் பெரும்பாலானவை பொருளாதாரத்தைச் சார்ந்தவைகளாக இருக்கின்றன.

உதாரணமாக... என்னுடைய தந்தை திரு. தமிழ்வாணன் அவர்கள் "நாம் வாழ்க்கையிலே சந்திக்கிற பிரச்சனைகள் நம்மைப் போட்டு உலுக்கிற உலுக்கு இருக்கிறதே, அவை பெரும்பாலும் பொருளாதாரம் சார்ந்தவைகளாகத்தான் இருக்கின்றன. இன்னும் சொல்வதானால்; 90 சதவீதம் பிரச்சனைகள் பொருளாதாரத்தைச் சார்ந்தவைகளாக இருக்கின்றன. பணம் சார்ந்தவையாக இருக்கின்றன. எனவே, பொருளாதாரத்தை வென்று எடு'' என்று அவர்கள் சொல்வார்கள்.

மீதம் இருக்கிற 10 சதவீதத்தையும் சொல்லாவிட்டால், செய்தியிலே முழுமை இருக்காது. 5 சதவீத பிரச்சனைகள் தாமாகவே வருபவையாம். நாம் நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டோம்... அது வந்து விழும்! நாம் பாட்டிற்கு சிவனே என்று சாலையிலே போய்க்கொண்டு இருப்போம். ஒரு வயசான அம்மா வந்து விழுந்து, ஏதோ ரோட்டிலே நடக்குறது, அவங்க வீட்டுக்குள்ளே என்கிற மாதிரி நடந்து வண்டியிலே வந்து விழுவாங்க.

தாயினுடைய அன்பு இருக்கிறதே, எந்த எதிர்பார்ப்பும் இல்லாத ஒரு அன்பு. அந்த அன்பே தன்னுடைய மகன் சம்பாதிக்கவில்லை என்றாலோ, பொருளாதாரத்தில் அவன் தன்னிறைவு அடைவில்லை என்று சொன்னாலோ. தனக்கு வேண்டிய தேவைகளை அவன் செய்யாவிட்டாலோ அல்லது தன்னுடைய மகளுக்கு அதாவது அவனுடைய சகோதரிக்கு செய்யாவிட்டாலோ உடனே அவளுடைய அன்பைக்கூட பெறத் தவறிவிடுவோம்

தாயன்பைப் போல உலகத்திலே புனிதமானது வேறு எதுவும் கிடையாது. அதற்குக்கூட கலகம் ஏற்படுத்துகிற ஆற்றல் பொருளாதாரத்திற்கும் பணத்திற்கும் இருக்கிறது என்பதைத்தான் நம்முடைய மூதுரை சொல்கிறது. எனவே, இந்த சமுதாயம் எதிர்பார்க்கிற அளவிற்கு, நம்முடைய தேவையை வென்றுவிடுகிற அளவிற்கு, நாம் பொருளாதாரத்தில் ஈடுகட்ட வேண்டிய வர்களாக இருக்கிறோம். அதை நாம் செய்யாவிட்டால், பொருளாதாரம் என்கிற ஆக்க சக்தி, நம்மை அழுத்துகிற சக்தியாக மாறிவிடும் என்று சொல்கிறார்கள்.

மூன்றாவது, நம்மை ஆதிக்கம் செய்கிற விஷயம் வாழ்க்கைத் துணை. கணவன் என்றால் மனைவி, மனைவி என்றால் கணவன். இதிலே ஒருவரை ஒருவர் பரஸ்பர அன்போடு புரிந்துகொண்டு, வாழ்க்கை சிறப்பாக நடத்தினால் ஒன்றும் பிரச்சனை இல்லை.

ஆனால், எப்பேற்பட்ட அமைதிவாழ்க்கை நடத்துகிறவர்களின் வாழ்க்கையிலும் கூட சிக்கல்கள் வருகின்றன. போராட்டங்கள் வருகின்றன. புரிந்துணர்வு இல்லாமல் போகிறது. அன்பு வறண்டு போய்விடுகிறது என்கிறபோது சிக்கல்கள் அதிகமாகி விடுகின்றன. சண்டைகள் பெரியதாகி விடுகின்றன. கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் அதிகமாகிவிடுகின்றன.

ஒரு கணவன், ஒரு மனைவியை சரியான முறையிலே பராமரிக்கா விட்டால், அன்பு செலுத்தாவிட்டால், நிர்வகிக்காவிட்டால் அவளுடைய கை உயர்ந்துவிடுகிறது. அவள் இவனை நிர்வகிக்க ஆரம்பித்துவிடுகிறாள். இவள் சொல்வதையெல்லாம் அவன் கேட்கவேண்டிய அவசியத்திற்குத் தள்ளப்படு கின்றான். இதுகூட பரவாயில்லை. பலநேரங்களிலே எலியும் பூனையும் போல ஆகிவிடுகிறார்கள்.

2. நீண்ட நாள் திட்டங்கள்

தென்னிந்தியாவிலே தமிழகத்தைப் போல கொடுத்துவைத்த ஒரு மாநிலம் வேறு இல்லை என்பதை ஒரு கோணத்தில் உறுதியாக சொல்லமுடியும். தமிழகத்தைப்போல மலைவாசஸ்தலங்கள் உள்ள தென்னிந்திய மாநிலம் வேறு எதுவும் இல்லை.

கர்நாடகத்திலே நந்தி ஹில்ஸ் போன்ற மிகச்சில மலைகள்தான் இருக்கின்றன. கேரளாவிலே மூணாறு, தேக்கடி போன்ற சில இடங்கள் இருக்கின்றன. ஆந்திராவிலே திருப்பதி போன்ற இடங்கள் இருக்கின்றன. தமிழகத்தில் இருக்கின்ற எண்ணிக்கை அளவிற்கு மிக உயரமான மலைகளோ, சிறந்த மலைவாசஸ்தலங்களோ மற்ற மாநிலங்களிலே இல்லை என்பதுதான் உண்மை.

ஆனால், இந்த மலைவாசஸ்தலங்களின் அடிவாரத்தில் இருக்கிறார்கள் அல்லவா தமிழக மக்கள்... அவர்கள் எல்லாம் அந்த மலைகளிலே ஏறி, அந்த மலையைப் பார்த்து இருப்பார்களா, அந்த இனிமையான ஒரு குளிர்பகுதியையோ அல்லது இயற்கைக் காட்சிகளையோ, மலர்களையோ, மலர்க் கண்காட்சி களையோ எத்தனைபேர் பார்த்திருப்பார்கள், என்பது பெரிய கேள்வி.

வெள்ளைக்காரன் வெப்பம் தாங்காமல் அந்த மலையின் மீது அவனே பாதையை அமைத்தான். ஒரு பல்லக்கு அமைப்பிலே அவனே அமர்ந்துகொண்டு. அந்தக்காலத்து மக்களின் உதவியோடு, தோளிலே தூக்கவரச் செய்து, மலைக்குப்போய் இருந்தான். பிறகு பாதை போட்டான். இப்படி பெரும்பாலான தமிழக மலைவாசஸ்தலங்கள் வெள்ளையர்களால்தான் மிக முன்னேற்றமான நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டது. அது ஒரு தனிக்கதை.

ஆனால், இந்த மலை அடிவாரத்தில் இருக்கின்ற மக்கள் அந்த மலையில் ஏறி, அந்த மலைவாசஸ்தலத்தின் இனிமையை ஏன் அனுபவிக்கவில்லை, என்று கேட்டால் என்ன சொல்வார்கள். இங்கேதானே இருக்கிறது... எப்போது வேண்டுமானாலும் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்வார்கள் அல்லது வேறுசில காரணங்களைச் சொல்லக்கூடும்.

'நான் சொன்னால், நீ கேட்பதில்லை. எனவே, நீ சொன்னால் நான் கேட்பதில்லை' என்கிற போராட்டம் வேறு தனியாக நடந்துகொண்டிருக்கிறது. யாருடைய இல்லற வாழ்க்கையில்தான் சிக்கல் இல்லை... எல்லோருடைய வாழ்க்கையிலும் சிக்கல்கள் இருக்கின்றன.

அப்படியானால் என்னதான் வழி? அவர்களுடைய குறையோடு அவர்களை ஏற்றுக்கொள்வதுதான் ஒரே வழி. சரி... அவர்களுடைய மைனஸ் பாயிண்ட் என்னவென்று தெரிந்தாலாவது பரவாயில்லை. எனினும், இவர்கள் இப்படித்தான்... இதைத் தாண்டிதான் நாம் வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுதான் நம்முடைய சமுதாயப் பண்பாடாக இருக்கிறது.

எனவே, இந்த நேரத்திலே நான் சொல்லவிரும்புவது, ஒவ்வொரு வாழ்க்கைத் துணையும் தன்னுடைய வாழ்க்கைத் துணைவியாரை அல்லது வாழ்க்கைத் துணைவரை சரியாக நிர்வகிக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் வீட்டில் ஒருவருடைய ஆதிக்கம் மிக அதிகமாகப் போய்விடும்.

எனவே, பணம், நேரம், வாழ்க்கைத் துணை என்கிற மூன்று விஷயங்களிலும் சரி, நாம் சரிவர கற்றுக்கொள்ளாவிட்டால் அவர்கள் நம்மை நிர்வகிக்க ஆரம்பித்துவிடுவார்கள். இந்த மூன்றையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளக்கூடிய ஆற்றலை நாம் என்றைக்கு வளர்த்துக்கொள்கிறோமோ அப்போதுதான், வாழ்க்கையினுடைய முழுமையான நிறைவு, மகிழ்ச்சி எல்லாம் கிடைக்கும்.

எனவே, இந்த மூன்றையுமே நிர்வகிப்பதிலேயே நாம் கெட்டிக்காரர்களாக ஆக வேண்டும்; வல்லவர்களாக ஆக வேண்டும் என்கிற கோணத்திலே சிந்தித்து ஒவ்வொரு அசைவுகளையும் கவனமாக எடுத்து வைத்து, இதனுடைய விளைவு என்னவாகும் என்று கணக்குப் போட்டு – வகுப்பில் கணக்குப் போட்டு மிகச்சிறந்த மதிப்பெண்கள் பெறுவது பெரிய விஷயம் அல்ல – வாழ்க்கைக் கணக்குகளையும் சரியாக போடத்தெரிந்து இருக்கவேண்டும். எனவே. இந்த மூன்றையும் சரிவர நிர்வகிப்போம்... வாழ்க்கையிலே மிகச்சிறந்த உயரங்களைத் தொடுவோம்.

முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது... உடல்நிலை ஒத்துழைக்காமல் போகிறது... பொருளாதாரக் கட்டணங்கள் மிக உயர்ந்துவிடுகின்றன... தீம் பார்க்குக்கு ரூபாய் 50லிருந்து 300வரை உயர்ந்த காலகட்டத்தில், ஒரு மருத்துவமனைக்குச் செல்ல நேரிடுகிறது.

ஏதோ சின்ன உபாதை, வெகுகாலம் ஓட்டிக்கொண்டே இருக்கிறார்கள்... காரணம் சொல்லமாட்டேன் என்கிறார்கள். அந்த வியாதியோ மிக அதிகமாகி விடுகிறது. இப்படியான நிலையும் உண்டு.

தியானம் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் உணர்ந்திருக்கிறார்கள். யோகக்கலையினுடைய அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். போய்க் கற்றுக் கொள்ள வேண்டும்... பயிற்சியைப் பார்க்கணும்... எப்போ போறது, எங்கே நேரமிருக்கிறது, என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், போவதில்லை.

உலகம் இந்தியாவிடமிருந்து பெற்ற மிகச்சிறந்த கொடைகளுள் இரண்டான தியானமும், யோகமும் நம் நாட்டிற்குரிய அருமையான கலைகள். மேலை நாட்டினர் எல்லாம் அவற்றின் அருமையை உணர்ந்து கற்றுக்கொள்ளத் துவங்கிவிட்டார்கள். ஆனால், இங்கே இருக்கிறவர்களுக்கு 300 ரூபாயிலும், 500 ரூபாயிலும், 1000 ரூபாயிலும் கிடைக்கக்கூடிய அந்த கலையை கற்றுக் கொள்வதற்கு அவர்கள் முன்வரவில்லை. பலபேர் காலத்தைக் கடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

அப்படியானால் அருகிலுள்ள ஒரு மலைவாசஸ்தலத்தைப் பார்க்காமல் இருப்பது, ஒரு ஊரைப் பார்க்காமலும் ஒரு மருத்துவமனைக்குச் செல்லாமலும் இருப்பது அல்லது ஒரு பயிற்சியை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

நாம் எப்பொழுதுமே ஒரு அண்மைக் காலத்திலேயே அந்த வேலையை முடித்துவிடலாம் என்று நினைக்கிறோம். ஆனால், அந்த அண்மைக் காலம் இடம் தரமுடியாதபடி வேலைகள் சேர்ந்துவிடுகின்றன. எதுவொன்றையும் அடையவேண்டுமென்று சொன்னால், செல்ல வேண்டுமென்று சொன்னால்,

இப்படி மிக அருகிலே இருக்கிறவர்கள் பார்க்காத இடங்கள் என்று எடுத்துக்கொண்டால், என்னால் மிக நீண்ட பட்டியலைத் தரமுடியும். வாட்டர் வேர்ல்டு என்று சொல்லப்படுகிற தீம் பார்க்குகள் பல இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்த பூங்காக்களின் அருகிலே, 1 கிலோமீட்டர், 2 கிலோமீட்டர், 3 கிலோமீட்டர் சுற்றுவட்டாரத்தில் இருக்கிறவர்கள் அதையெல்லாம் உள்ளே போய் பார்த்தார்களா என்றால், பெரும்பாலானோர்கள் இல்லை என்றே பதில் சொல்வார்கள்.

சிலபேர் மிக அதிகமான கட்டணம் வசூலிக்கிறார்கள் என்பதால் செல்லமுடியாது என்று சொல்லக்கூடும். 50 ரூபாய் 100 ரூபாய் என்று ஆரம்பித்தார்கள்... அந்தக் கட்டணங்கள் இன்றைக்கு முந்நூற்றிச் சில்லரையில் போய் நிற்கின்றன. அப்படியானால், எப்பொழுதுதான் பார்க்கப்போகிறீர்கள் ?

மிக அருகிலே இருந்து கூட, அதனைப் பார்க்காததற்கு அவர்களுக்கு ஒரு தெளிவற்ற, நீண்ட ஒரு நெடிய பார்வை இல்லாததுதான் காரணம் என்பதை நான் பலநேரங்களிலே உணர்ந்திருக்கிறேன்.

நான் நியூசிலாந்துக்குச் சென்று திரும்பிய பிறகு, ஆஸ்திரேலியாவில் இருக்கிற பல தமிழர்களை நான் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவர் களிடத்திலே, "எத்தனை பேர் நியூசிலாந்திற்குச் சென்றிருக்கிறீர்கள் ?'' என்று நான் கேட்டேன்.

பல தமிழர்கள் சொன்ன பதில், "நான் நியூசிலாந்தை பார்த்ததே இல்லை;'' "எங்கோ தொலைதூரத்திலே இருக்கிற இந்தியாவிலிருந்து வந்த நான் பார்த்துவிட்டேன். மிக அருகில் இருக்கிற நீங்கள் ஏன் அதைப் பார்க்கக்கூடாது'' என்று கேட்டால், "இங்கேதானே இருக்கு. எப்போ வேணுமானாலும் பார்த்துக்கொள்ளலாம்'' என்பதாக ஒரு பொத்தாம் பொதுவான பதிலிலேயே அவர்களின் எண்ண வோட்டம் இருப்பதாலும், ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தை நிர்ணயிக்காமல் இருப்பதாலும்தான் அவர்கள் பார்க்கவில்லை என்பதைக்கூட நான் உணர்ந்தேன்.

'எப்போது வேணுமானாலும் போய் பார்த்துக்கலாம்' என்கிற நினைப்பிலேயே பலபேர் அந்தக் காலத்தைக் கடந்துவிடுகிறார்கள். போக

பயிற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னால், பார்க்க வேண்டுமென்று சொன்னால் ஒரு தொலைதூரத் திட்டத்தை வகுக்கவேண்டும்.

இப்பொழுது எந்த மாதத்தில் இருக்கிறோமோ, அதிலிருந்து ஒரு இரண்டு மாதம் கழித்து அந்த இரண்டாவது மாதம், நான் நிச்சயமாக அந்த மலை வாசஸ்தலங்களுக்கு செல்வேன்; அந்த குறிப்பிட்ட தேதியிலே போய் நான் பார்ப்பேன்; இந்தப் பயிற்சியை நான் மேற்கொள்வேன். தியானம் கற்றுக் கொள்வேன் என்பதை, ''அடுத்த வாரம் போகிறேன். அடுத்த மாதம் செல்கிறேன்'' என்று சொல்லும்போது, வேலையினுடைய நெருக்கடிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள், பொருளாதார நிலைகள் நமக்கு இடம் கொடுக்காமல் விட்டுவிடுகின்றன.

ஆனால் ஒரு தொலைநோக்கோடு யோசித்து, ஒரு நீண்ட நெடிய காலத்திற்குப் பிறகு காலத்தை நிர்ணயித்தால், நிச்சயமாக அது சாத்தியம். மருத்துவத்திற்குக் கூட இது பொருந்தும். ஒரு பல்லை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றோ அல்லது முதுகிலே இருக்கின்ற ஒரு கட்டியை நீக்க வேண்டுமென்றோ, ஒரு அவசரம் இல்லாத ஒரு மருத்துவ சேவையை செய்து கொள்ள வேண்டுமென்றோ சொன்னால், அடுத்த வாரம், அடுத்த வாரம், அடுத்த வாரம் என்று சொன்னால் நகர்ந்து கொண்டே போகிறது.

நான் அவர்களிடம், இத்தனை வாரம் ஓட்டியது போதும், இப்படி எவ்வளவோ காலம் போய்விட்டது. எனவே. ஒரு தொலைதூரக் காலத்தை நிர்ணயிங்கள். அதற்கு ஏற்றமாதிரி வேலைகளிலே நீங்கள் ஈடுபடுங்கள். அதற்கான முயற்சியில் இறங்குங்கள்.

உடனடியாக ஒரு காலக்கட்டத்தை நிர்ணயித்தால், அது பெரும்பாலும் முடியாமல் போய்விடுகிறது. ஒரு நிலம் வாங்கவேண்டும்... மகளுக்கு திருமணம் செய்யவேண்டும்... ஏதோ ஒரு இலக்கை அடையவேண்டுமென்று சொன்னால். நாம் உடனே அடுத்த வாரம், அடுத்த மாதம் என்றெல்லாம் சிந்தனை செய்தால் அது வேலைக்கு ஆகிற விஷயம் இல்லை.

எனவே 2016ல், 2017ல், 2019ல் நான் ஒரு நிலம் வாங்கியே தீருவேன் என்று தீர்மானமாக சிந்தித்து, அதிலே அழுத்தமாக இருந்து, அதை நோக்கி

சின்னச் சின்ன முயற்சிகளை எடுத்து வந்தால், நாம் எந்த காலகட்டத்தை நிர்ணயிக்கிறோமோ அந்தக் காலக்கட்டத்திலேயே அந்த வேலையை முடித்துக்கொள்வது சாத்தியம்.

'நிலம் வாங்கணும், எப்போ வாங்கப்போறேன்னு தெரியலை. அது அமையட்டும். அதெல்லாம் நம்ம கையில இருக்கா' என வானத்தைப் பார்த்தால் அந்தக் காலம் போய்க்கொண்டேதான் இருக்கும். எனவே, ஒரு தொலைதூர நாளை அல்லது வருடத்தை நிர்ணயித்துக் கொண்டு, அதை நோக்கி நகரவேண்டும்.

என்னென்ன காரணங்களால் தடைபட்டு நிற்கின்றனவோ, அவற்றை யெல்லாம் நீக்குவதற்கான முயற்சியிலே, இருக்கக்கூடிய அந்த காலக் கட்டத்தைப் பயன்படுத்தி, ஒவ்வொன்றாக மெல்லமெல்ல நகர்த்திப் பயன்படுத்திக் கொண்டால் நிச்சயமாக சாத்தியம் என்று சொன்னேன்.

அதேபோல, இன்றைக்கு தமிழகத்தில் நிறைய சுயமுன்னேற்றப் பயிற்சி வகுப்புகள் நடக்கின்றன. உதாரணமாக, நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளக்கூடிய பயிற்சி. இன்றைக்கு ஆன்மீகத் தலைவர்கள் நிறைய பேர் அருமையான தியான முறைகளையும், பல்வேறு வாழ்வு முன்னேற்ற சிந்தனைகளையும் பேசுகிறார்கள்.

அதற்கெல்லாம் யார் போய் நாள் முழுவதும் உட்கார்ந்திருப்பது ? மூன்று நாளெல்லாம் நேரம் ஒதுக்குவது என்றெல்லாம் நாம் மலைக்கிறோம் அல்லவா ?

இதையே தள்ளிப்போட்டு, இந்த பயிற்சி முடிந்துவிட்டது. பிறகு சென்னைக்கு எப்போது வருகிறீர்கள், இல்லை அந்த ஊரிலே எப்போது நடத்துகிறீர்கள், என்று கேட்டு அந்த காலக்கட்டத்திற்கு... உதாரணமாக, ஒரு மூன்று மாதம் கழித்து மீண்டும் அந்த ஆழ்நிலை தியானத்தையோ அல்லது வேறு ஏதோ நல்ல பயிற்சியையோ அல்லது நினைவாற்றல் பயிற்சியோ. பதின்கவனகர் போன்றவர்கள் நடத்துகிற பயிற்சி வகுப்பையோ நாம் நிர்ணயித்துக்கொள்வதற்கு ஒரு தொலைதூரக் காலக்கட்டத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்.

3. நேரத்தை எதற்கு செலவழிக்க வேண்டும்?

"நேரத்தை மிச்சம் பிடியுங்கள்... நேரத்தை மிச்சம் பிடியுங்கள்..." என்று பல தினங்களாக, பல முறைகளிலே நான் சொல்லிக்கொண்டே இருப்பதற்குக் காரணம் இருக்கிறது. நமக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட கால எல்லையுடையது.

அவற்றை நாம் சரியாகப் பயன்படுத்தினால், அது இரண்டு வாழ்க்கை வாழ்வதற்கு சமம். நான் சொல்வது இரட்டை வாழ்க்கை அல்ல... இரண்டு ஆயுளுக்கு சமம் என்கிற அர்த்தத்தில் சொல்கிறேன். ஆனால், அதை சரிவர பயன்படுத்தாவிட்டால், அது பாதி வாழ்க்கைக்குச் சமமாக ஆகிவிடுகிறது.

'நேரத்தை விரயம் ஆக்காதீர்கள். மிச்சம் பிடியுங்கள் சொல்கிறீர்களே அதை எதற்கு பயன்படுத்துவது, எதற்காக அதை செலவழிக்க வேண்டும், அதை எதை நோக்கித் திருப்பவேண்டும் என்று சொல்லுங்கள்' என்று நீங்கள் எழுப்பும் மனக்கேள்வி எனக்குப் புரிகிறது. 'நாம் எந்த துறையிலே ஈடுபட்டிருக்கிறோமோ, அந்தத் துறையிலே நாம் வல்லவர்களாக இருக்கிறோமா' என்ற ஒரு கேள்வியை உங்கள் மத்தியிலே நான் வைக்க விரும்புகிறேன். அது எந்தத் துறையாக இருந்தாலும் சரி.

எளிய வேலையிலிருந்து மிகப்பெரிய நிலையிலே இருக்கிற வரைக்குக்கூட நான் கேட்கிறேன்... உங்கள் துறையிலே நீங்கள் சர்வவல்லமை படைத்தவரா, அதிலே தெளிவானவரா, ஆழமானவரா, அழுத்தமானவரா, நீங்கள் சரியாக இருக்கிறீர்களா என்கிற பொதுவான ஒரு கேள்வியை வைக்கிறேன். அந்தக் கேள்விக்கான விளக்கத்தையும் நான் சொல்ல விழைகிறேன்.

நாம் எந்தத் துறையிலே இருக்கிறோமோ, அந்தத் துறையிலே நாம் உண்மையானவராக ஈடுபட்டு, அதிலே ஆழ்ந்து, கவனத்தோடு இருக்க வேண்டும் என்று சொல்றார்கள். நம் துறையினுடைய ஆர்வமும், அகலமும் முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும். அந்தத் துறையிலே நமக்கு சர்வ வல்லமையும் வேண்டும்.

தொலைதூர நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுக்க வேண்டும், தேர்ந்தெடுத்துக் கொண்டு, அதற்காக சேமிப்பதற்காக உடல் ரீதியாகவோ, உள்ளத்து ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, சமுதாய அமைப்பு ரீதியாகவோ, அலுவலக ரீதியாகவோ நாம் அந்த இலக்கை நிர்ணயித்துக்கொண்டால், நிச்சயமாக அந்தத் தேதியிலே... ஒரு பாரடே; பறத்தலில் நிபுணரான ஒருவர் எப்படி வட்டம் போட்டு, அதிலே சரியாக காலை வைப்பார்களோ அதைப்போல, நாமும் மிகச்சரியாக இறங்க முடியும்.

பல மனத்தடைகளோடு வாழ்கிற நாம் என்ன நினைக்கிறோம் என்றால்... "இவங்க என்ன சொல்றது, நாம என்ன கேட்கறது, இவங்க என்ன புதுசா சொல்லிடப்போறாங்க" என்று நாம் விரும்புகிற ஒரு விஷயத்திற்கு நாமே சில அணைகளைப் போட்டுக்கொள்கிறோம். நாமே சில தடைகளை உருவாக்கிக் கொள்ளுகிறோம்.

எனவேதான், இது சாத்தியம் இல்லாமல் போய்விடுகிறது. எனவே, சில நேரங்களில் உடனடியாக செய்யவேண்டும் என்கிற அவசியம் இல்லாத சில விஷயங்களை, தொலைநோக்கொடு பார்த்து, இலக்கு நிர்ணயித்து, அதை நோக்கி நடப்பதற்கு நாம் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டால், நாம் வாழ்க்கையில் என்னவெல்லாம் செய்ய ஆசைப்படுகிறோமோ, என்னவெல்லாம் நாம் அடைய விரும்புகிறோமோ, என்னவெல்லாம் நாம் திட்டமிடுகிறோமோ எல்லாவற்றையும் நடத்தி முடிப்பது என்பது சாத்தியம்.

எனவே, நம்முடைய அணுகுமுறையிலேதான் மாற்றம் செய்யவேண்டி இருக்கிறது என்று நீங்கள் உணர்ந்தாலே, நிச்சயமாக நீங்கள் அடைய விரும்பு வதெல்லாம் அடையமுடியும். அதற்கான பார்வைகளை மாற்றிக் கொண்டால் போதும். எனவே, எதுவும் சாத்தியம்... எல்லாம் சாத்தியம்... நாம் மனம் வைக்க வேண்டும். அதற்கேற்பத் திட்டமிடவேண்டும். எனவே, அதைநோக்கி நாம் நகர்வோம்.

அந்தத் துறையில் இருக்கிற ஆணிவேர், சல்லிவேர் வரைக்கும் நாம் அந்தத் தொழிலை சரியாகத் தெரிந்து இருக்கிறோமா, அதை முறையாகப் பயன்படுத்துகிறோமா, அதிலே நமக்கு இருக்கிற அறிவு முழுமையாக இருக்கிறதா என்கிற கேள்வியை எழுப்பினால், பலபேர் தெளிவாக இல்லை என்பதுதான் என்னுடைய தனிப்பட்ட கருத்து.

என்னைப் பார்க்க ஆயுள் காப்பீட்டு முகவர் ஒருவர் வந்தார். அவரிடத்திலே நான் ஒரு மூன்று கேள்விகளைக் கேட்டேன். உடனே அவர் "எனக்கு இந்தக் கேள்விக்கு விடை தெரியவில்லை. நான் என்னுடைய டெவலப்மெண்ட் ஆபிசரைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். ஆயுள் காப்பீட்டு முகவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற ஒரு சிறிய நூலில் எல்லா விவரங்களும், எல்லா விளக்கங்களும் இருக்கின்றன.

அதைக்கூட படிக்காமல், அடிப்படைக் கேள்விக்குக் கூட பதில் தெரியாமல் அவர் என்னை வந்து பார்த்தார். அந்த ஆயுள் காப்பீட்டு முகவரால் என்னிடத்திலே பாலிசி வாங்கமுடியவில்லை.

ஒரு ஆசிரியரோ அல்லது ஒரு பல்கலைக்கழகத்தில் உள்ள பேராசிரியரோ; அவரிடத்திலே என்ன குறைவேண்டுமானாலும் இருக்கலாம். என்ன தவறு வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், அவர் துறையிலே வல்லமை உடையவராக இருந்தால். அதை பலநேரங்களிலே மாணவர்கள் அல்லது நிர்வாகம் எல்லாருமே சகித்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால், துறை வல்லமையும் இல்லாமல், மற்ற பலவீனங்களும் உள்ளவராக இருந்தால், அவரை முழுமையான ஆசிரியராக இந்த சமுதாயம் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. ஒரு மாணவன் ஒரு ஆசிரியரைப் பற்றி சொல்கிற பொழுது அல்லது ஒரு பேராசிரியரைப் பற்றி விளக்கும்பொழுது. சப்ஜெக்ட்ல அவரை அடிச்சிக்க ஆளில்லை. மகா கில்லாடி என்று பேர் எடுத்து விட்டால், அதைவிட மிஞ்சிய பாராட்டு வேறு எதுவும் இருக்கமுடியாது. அப்படி சப்ஜெக்ட்ல அசைக்க முடியாதபடி எத்தனையோபேர் வல்லவர்களாக இருக்கிறார்கள்.

நான் அடிக்கடி மேலை நாட்டவர் பற்றிப் பெருமை பேசுவதாக எண்ணக் கூடாது. நம்மைப்போல் வாழ்க்கை அவர்களிடத்திலே இல்லை. அவர்களைப்போல தொழில்முறை நம்மிடத்தில் இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். நான் பார்த்தவரைக்கும் மேலை நாட்டவர்கள் என்ன துறையில் ஈடுபட்டிருக்கிறார்களோ, ஒரு கேமராமேனோ அல்லது ஒரு பத்திரிக்கை ஆசிரியரோ அல்லது அடிப்படையான தொழிலை செய்பவரோ, எவராக இருந்தாலும் அந்தத் துறையிலே அவர்கள் சர்வ வல்லமை படைத்தவராக இருக்கிறார்கள். எந்தக் கேள்வியைக் கேட்டாலும், அவர்கள் மிகச்சரியாக அதற்கு பதில் சொல்லுகிறார்கள். அதைப்பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

எங்கள் பகுதியிலே எல்லாம் முறுக்கு, வடை, சீடை, மாவு உருண்டை, மாவு வெல்லம் என்றெல்லாம் செய்து விற்கிற ஒரு அம்மையாரைப் பற்றி மிகவும் பெருமையாகப் பேசினார்கள். "அங்கேயுள்ள அந்தப் பலகாரங்கள் எல்லாம், மிக நன்றாக இருக்கும் வாங்கிச் செல்லுங்கள்'' என்று சொன்னார்கள்.

உடனே நொறுக்குத் தீனிக்காக போய் வாங்கி வந்து பார்த்தால், முறுக்கு கடமுடா என்று பல்லை பதம் பார்க்கிற மாதிரி இருக்கிறது. சீடையை எடுத்தால் அது செக்கச்செவேல் என்று இருக்கிறது. தவிர, அது ஒரு பொன்னிறமாகவும் இல்லை. மாவு உருண்டையை எடுத்துக்கொண்டால், கல்லுப் போல இருக்கிறது.

எதை எடுத்துக்கொண்டாலும், அந்தப் பொருள் பொருளாக இல்லை. எண்ணெயில் செய்ததில், எண்ணையைப் பிழியலாம் போல் இருக்கிறது. அவ்வளவு எண்ணெய் இருக்கிறது. கேட்டால் 30 வருடமாக அந்தத் துறையிலே இருக்கிறார்கள். தலைமுறைத் தொழில் என்று சொல்லி, பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

ஒரு வாடிக்கையாளர் விரும்பாத வகையில் அல்லது வாடிக்கையாளர் போற்றாத வகையில் அல்லது வாடிக்கையாளர் பயன்படுத்த முடியாத வகையிலான பொருளை, நீ 30 வருடமாக தயார் செய்து கொண்டு இருக்கிறாய் என்றால், குறைகளை உணர்கிற தன்மை என்னதான் செய்கிறது, தான் தயாரிக்கிற பொருளை மிகச்சரியாக எப்படி இருக்கவேண்டுமோ, அப்படித் தயாரிக்க ஏன் தெரியவில்லை உனக்கு, குறைவல்லமை எங்கே இருக்கிறது ?

ஒரு ஆர்வமற்ற மனிதர்களாக, நீர்த்துப்போன மனிதர்களாக ஒரு துறையில் இருந்து என்ன பயன்? அந்தத் துறைக்காக எந்த விதத்திலே பெருமை சேர்த்திருக்கிறோம் அல்லது அந்த தனி மனிதர் அல்லது அந்த நிறுவனம் தனக்கு பெருமை சேர்த்துக் கொள்ளமுடியும்?

ஒரு வாடிக்கையாளர் போற்றமுடியாத பொருளைத் தயார்செய்து குறைகளோடும் அல்லது பெரிய அதிருப்தியோடும் பொருளை தயாரித்து என்ன பயன், என்ன ஏது என்று அவர்கள் இருக்கிற துறைகளிலே அடுத்த கேள்விக்கு பதில் தெரியாது. அவ்வளவுதான்.

அதே துறையில்தான் இருப்பார்... எத்தனையோ வருஷமாக இருப்பார்... கேட்டால் எனக்குத் தெரியாது என்பார். இந்தப் பதிலை மேலை நாட்டவர்கள் பெரும்பாலும் சொல்வதில்லை. ஏனென்று சொன்னால், தாங்கள் துறை சார்ந்த அறிவிலே தெளிவாக இருக்கவேண்டும் என்பதற்காக அவ்வளவு நேரம் செலவழிக்கிறார்கள்.

குதிரைகளுக்குப் பார்வைகள் பக்கவாட்டிலே போய்விடக்கூடாது என்பதற்காக சேணம் என்று ஒன்றைக் கட்டுவார்கள். அப்படி குறிப்பிட்ட வேலையை மட்டுமே செய்துகொண்டிருப்பது, எதிரே இருக்கிற பக்கவாட்டுப் பார்வை (70 எம்எம் பார்வை) என்பது அவர்களிடத்திலே இல்லவே இல்லை. அதிலே பயன் ஏதும் இல்லை என்பது என் கருத்து.

ஒரு பிரபல கவிஞருடைய தாயார், "மகனே! நீ குப்பை கொட்டுகிற தொழிலை வேண்டுமானாலும் செய். கவிதை எழுதுவதைப் பற்றி நான் பேசவில்லை... நீ குப்பை கொட்டுகிற தொழிலை வேண்டுமானாலும் செய். ஆனால் குப்பை கொட்டுவதிலே அவருக்கு இணையாக யாருமே இல்லை என்கிற பெயரை அந்தத் துறையிலே, நீ எடுக்க வேண்டும்" என்று சொன்னாராம்.

எப்பேற்பட்ட அறிவுரை, இதை மேலை நாட்டவர் வழியாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஒரு தமிழ்நாட்டுத் தாய் சொல்கிறார், "ஒரு பொருள் என்பது இப்படி இருக்கவேண்டும்; இப்படித்தான் நீ தொழிலை செய்யவேண்டும்; அதிலே சர்வ வல்லமை படைத்தவனாக இருக்க

ஒரு திருமணத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபொழுது, ஒருவரை அறிமுகப்படுத்தும் விதமாக, அந்தப் பெண்ணின் அப்பா அவரிடத்திலே 20 வருடமாக கேட்டரிங் தொழிலை செய்து வருகிறார் என்று அறிமுகப்படுத்தி வைத்தார். "ரொம்ப நன்றாக சமைப்பார்; அப்படி சார்... இப்படி சார்..." என்றார். "கார்டை வாங்கிக்கோங்க சார். வாய்ப்பு இருந்தா சொல்லுங்க சார்" என்றார்.

நாம சுலபத்தில அதையெல்லாம் செய்திடமாட்டோம். இல்லை சாப்பிட்டுப் பார்த்து, நமக்கு அபிப்ராயம் நல்லபடியாக இருந்தாதானே நாம செய்யமுடியும், இட்லியை பார்த்தால் கல்லுப் போல இருக்கு. ரொம்ப வேடிக்கையா சொல்லணும்னா... காருக்கே டயரா மாற்றிடலாம் போல் இருக்கு.. அவ்வளவு கல்லாட்டம். சாப்பிடவே முடியாத ஒரு பொருளாக இருக்குது.

சாம்பார் ஊத்தினாங்க... அது வந்து ஒரு பருப்பு கடைசலாதான் பார்க்க முடிந்ததே தவிர, சாம்பாராக பார்க்கமுடியல. எனக்கு மனக்கேள்விதான் எழுந்தது. 20 வருஷமா இந்த தொழில்ல இருக்கிறே... ஒரு நல்ல இட்லி தயார் செய்யத் தெரியல... நல்ல சாம்பார் தயார் செய்யத் தெரியல... நீ 20 வருடமா இருந்து என்னய்யா பிரயோஜனம், என்று கேட்கமுடியல. மனசிலே இதை கேட்டுக்கட்டேன்.

அண்மையிலே ஒரு எழுத்தாளரைச் சந்தித்தேன். "அமெரிக்காவைப் பார்" என்று ஒரு நூலை எழுதி இருந்தார். அந்த நூலை என்னிடத்திலே கொடுத்தார். எனக்கு ஒரே ஆர்வம்... "அமெரிக்காவுக்கு எத்தனை முறை போய் இருக்கீங்க. இதுமாதிரி எழுதி இருக்கீங்க?" என்று கேட்டேன். "அமெரிக்காவுக்கு நான் போனதே இல்லை... நான் பார்த்ததே இல்லை..." என்றார். "என்னங்க, அமெரிக்காவைப் பார் என்று புத்தகம் எழுதியிருக்கீங்க" என்றேன். "அமெரிக்காவைப் பார் என்றுதானே எழுதியிருக்கிறேன். நான் போனேன்னா எழுதியிருக்கேன்" என்றார்.

இப்படியெல்லாம் அந்தத் துறையிலே எந்த விதமான அடிப்படைத் தகவல்களும் இல்லாமல், எந்த செறிவார்ந்த அறிவும் இல்லாமல். அந்தத் துறைகளிலே புத்தகங்களைக் கொண்டு வருகிறார்கள், எழுதுகிறார்கள், அந்தத் துறையிலே தாங்கள் இத்தனை ஆண்டுகளாக அனுபவித்தவர்களாக மார்தட்டிக் கொள்ளுகிறார்கள்.

அதற்காக நாம் நேரத்தை ஒதுக்கவேண்டும். துறை வல்லமையில் நேரம் ஒதுக்காவிட்டால், தெளிவாகாவிட்டால் நம் வளர்ச்சிகள் பாதிக்கப்படலாம். நாம் கேலிக்கு உள்ளாக நேரிடலாம்.

நம் மூலமாக வாடிக்கையாளர்களோ, நம் மூலமாக பலன்பெறுபவர்களோ நன்மை அடையாவிட்டால், நாம் துறையிலே இருப்பதைப் பெருமைப் பட்டுக்கொள்ள முடியாது. எனவே, துறை வல்லமைக்காக நேரம் சேலவிடுவோம்.

இதுவரைக்கும் போன காலங்கள் போய் ஒழியட்டும்; இனிமேல் இருக்கிற நேரத்தை நாம் சார்ந்திருக்கிற துறையில் நம்மை வளப்படுத்திக் கொள்வதற்காக நாம் நேரம் செலவழிப்போம். அதுவே பயனுள்ள நேரமாக இருக்கமுடியும். அதைத்தான் இந்த சமுதாயம் நம்மிடத்திலே எதிர்பார்க்கிறது.

4. மென்மையாக மறுக்கக் கற்றால் நேரம் மிச்சப்படும்

அமெரிக்காவிலே ஒஹையோ என்று ஒரு மாநிலம் இருக்கிறது. அங்கே மௌண்ட் வேணன் என்று ஒரு சிற்றூர் இருக்கிறது. அந்த சிற்றூரிலே இருக்கிற ஒரு தனியார் நிறுவனம் அமெரிக்கா முழுமையும் வலம் வந்து 100 வெற்றியாளர்களை இனம் கண்டு, அவர்களது ஒப்புதலோடு அவர்களைப் பேட்டிகண்டு, ஒரு வித்தியாசமான முயற்சியை செய்தது.

இந்த 100 வெற்றியாளர்களுடைய வெற்றியினுடைய இரகசியம் என்ன, சூத்திரங்கள் என்ன, காரணங்கள் என்ன, வழிமுறைகள் என்ன என்பதைக் கண்டுபிடித்து, இந்த உலகிற்கு சொல்வதுதான் அந்த தனியார் அமைப்பினுடைய நோக்கம்.

நம்மூரிலே எத்தனை பேர் வெற்றியின் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்வார்கள் என்பது பெரிய கேள்விக்குறி. அதைப்பற்றியெல்லாம்

வேண்டும்'' என்கிற ஒரு அழுத்தம், ஒரு படிக்காத தாய் சொல்லுகிற பொழுது அதற்கு எவ்வளவு கனம் இருக்கிறது பாருங்கள்.

கோவையிலே ஒரு நூற்பாலையில் ஒரு இயந்திரப் பொருள் கெட்டு விட்டது. இங்கே இருப்பவர்கள் சரிசெய்யப் பார்த்தார்கள். முடியவில்லை. உடனே ஜாதியானாவிலிருந்து ஒருவரை வரவழைத்தார்கள். அவர் வந்தார், பார்த்தார், ஒரு கத்தியலை எடுத்தார், ஒரு தட்டு தட்டினார். இயந்திரம் ஓட ஆரம்பித்துவிட்டது. தொழிலிலே அவ்வளவு தெளிவு. அந்த நூற்பாலை யினுடைய அதிபர் வியந்து போனார். அந்த அளவிற்கு தொழிலிலே வல்லமை படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக இந்த சம்பவத்தை சொல்லுகிறார்கள். ஐயங்களே இல்லாத அளவிற்கு நம்முடைய துறையிலே நமக்குத் தெளிவு இருக்கவேண்டும்.

ஒரு வீட்டிலே சமையலில்கூட முழுமை இருக்க வேண்டும்; முழுமையான அறிவு நமக்கு இருக்கவேண்டும். எத்தனையோ ஆண்டுகளாக தொடர்ந்து நாம் செய்துகொண்டு இருக்கிறோம். ஆனால், அதிலே சர்வ வல்லமையும் ஆழமும் முழுமையும் இல்லாமல் இருந்தால் அதில் என்ன பயன் ? எனவே எங்கெங்கோ கை நடுவினிலே கசிந்து கொண்டிருக்கிற நேரவிரயத்தை எல்லாம் செம்மை யாக்கி, நாம் என்ன துறையிலே இருக்கிறோமோ, அதில் தெளிவடைவது அவசியம்.

இப்பொழுது நான் எழுத்துத் துறையிலே இருக்கிறேன் என்று சொன்னால், பத்திரிக்கைத் துறையிலே இருக்கிறேன் என்று சொன்னால், அதிலே எனக்கு முழுமையான அறிவு இருக்கவேண்டும் என்று சமுதாயம் எதிர்பார்த்தால் அதிலே என்ன தவறு ?

என்னுடைய சமகால படைப்பாளர்களைப் பற்றியோ, இலக்கியங்களைப் பற்றியோ, மேலைநாட்டு இலக்கியங்களைப் பற்றியோ எனக்குத் தெரியாவிட்டால் என்னை இந்த சமுதாயம் அங்கீகரிக்குமா அல்லது ஏற்றுகொள்ளுமா ?

எனவே நாம் எந்தத் துறையில் ஈடுபட்டாலும் சரி, அது என்ன பொறுப்பாக இருந்தாலும் சரி, அதிலே ஒரு முழுமையான அறிவை நாம் பெறவேண்டும்.